# முரசொலி

பக்கங்கள் நான்கு — விலை ரூபா; 5-00

முரசு 05 ஒலி 237 ஆங்கீரச ஆடி 15 (30.07.1992) வியாழன்


★ அகதிகளின் விருப்பை ஐ. நா அறியமுன்

## அகதிகளை விரைவாக அனுப்ப

### மீண்டும் விமான சேவை ஆரம்பம்

எதிர்வரும் திங்கட்கிழமை முதல் தமிழகத்திலிருந்து இலங்கை அகதிகளை ஏற்றி வரும் விமானசேவை மீண்டும் ஆரம்பிக்கின்றது. வாராந்தம் திங்கள், வியாழக் கிழமைகளில் இந்த விமான சேவை சென்னையிலிருந்து திருகோணமலைக்கு நடத்தப்படும். இலங்கை திரும்ப விருப்பம் தெரிவித்த 10 ஆயிரம் அகதிகளும் இந்த விமானசேவை மூலம் கொண்டு வரப்படுவர் என தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன. தமிழகத்தில் தங்கியுள்ள இலங்கை அகதிகள் தமது சுய விருப்பத்துடன் தானா தாயகம் திரும்புகின்றனர் என்பதை அறிய ஐ. நா அகதிகள் உயர்ஸ்தானிகராலயம் நடவடிக்கைகளை எடுத்துள்ள இந்நிலையில் நிறுத்தப்பட்டிருந்த அகதிகள் விமான சேவை இப்போது திடீரென ஆரம் — 04 ஆம் பக்கம் பார்க்க

# ரோந்து அணிமீது அதிரடி

# முப்பது படையினர் பலி

## உதவிக்கு வந்த படையினரும் விரட்டியடிப்பு

## ஆர். பி. ஜி. தாக்குதலில் கவசவாகனம் நாசம்

**மட்டக்களப்பில் இராணுவரோந்து அணி ஒன்று நேற்று புலிகளின் அதிரடிக்குள்ளானதில் முப்பது இராணுவத்தினர் பலியாகினர் பல ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன**

நேற்றுக்காலை 8.20 மணியளவில் நாவலடி இராணுவ முகாமிலிருந்து ஆறாம் கட்டை முகாம் நோக்கி 60 படையினரைக் கொண்ட இராணுவ ரோந்து அணி ஒன்று சென்று கொண்டிருந்தது.

இந்த அணி நாவலடி முகாமிலிருந்து 1 மைல் தொலைவிலுள்ள ஆலங்குள சந்தியில் வைத்து புலிகளின் திடீர் தாக்குதலுக்கு இலக்கானது.

சுமார் 12 நிமிட தாக்குதலில் 30 படையினர் பலியாகினர் 10 படையினர் காயமடைந்தனர் ஏனைய படையினர் நாவலடி முகாமிற்கு தப்பியோடினர்.

இச்சமயம் தாக்குதலுக்குள்ளான படையினருக்கு உதவ நாவலடி முகாமிலிருந்து டாங்கி இரு கவச வாகனம் சகிதம் இராணுவ அணியொன்று விரைந் — 4 ஆம் பக்கம் பார்க்க

## கிளாலி சேவை ஆரம்பம்

கிளாலி படகுச் சேவை மீண்டும் வழமைக்கு திரும்பி — 04 ஆம் பக்கம் பார்க்க

## வீரச்சாவு

மட்டக்களப்பில் நேற்று நடைபெற்ற தாக்குதலில் 2 ஆம் லெப் ரவிகுலன் வீரச்சாவு எய்தினர்.

## மட்டக்களப்பில் கைப்பற்றிய ஆயுதங்கள்

மட்டக்களப்பில் இராணுவ ரோந்து அணிமீதான தாக்குதலில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

- ஏ. கே. எல். எம். ஜி - 04
- டரம் மகஸீன் - 12
- விங் - 759
- 60 எம். எம் மோட்டார் - 01
- [illegible] - 01
- பேஸ் பிளேட் - 01
- 40 எம். எம் பிஸ்டல் - 01
- ரி-56 துப்பாக்கிகள் - 25
- மகஸீன்கள் - 70
- ரி-81 துப்பாக்கி - 01
- மகஸீன்கள் - 04

04 ஆம் பக்கம் பார்க்க

## வீடுபார்க்கச்சென்றவர் மீது விழிசிட்டியில்படையினர்சூடு

நேற்றுக்காலை பத்துமணியளவில் தென்மராட்சி விழிசிட்டிப்பகுதியில் வீடுபார்க்கச் சென்ற பொதுமக்களை நோக்கி அப்பகுதியில் மறைந்திருந்த படையினர் சரமாரியாக வேட்டுக்களைத் தீர்த்தனர்.

இதனால் வீடு பார்க்கச் சென்ற பொதுமக்கள் எடுத்த பொருட்களையும் அந்தந்த இடங்களிலேயே போட்டு விட்டுத் திரும்பி ஓடி வந்தனர்.

சேத விவரங்கள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை 22

## படையினருக்கான சிகிச்சை விரிவுரை நிகழ்த்தும் டாக்டர்

யுத்த முனையில் காயமடையும் படையினருக்கான சிகிச்சையில் தமக்கு ஏற்பட்ட அனுபவங்களை சத்திர சிகிச்சை நிபுணரான காமினி குணதிலக்க நேற்று முன்தினம் கொழும்பில் சத்திர சிகிச்சை நிபுணர்கள் கலந்து கொண்ட ஓர் கூட்டத்தில் விரிவுரையாக நிகழ்த்தினார்.

இவர் பொலநறுவையில் உள்ள தள ஆஸ்பத்திரியில் பல ஆண்டுகளாக பணிபுரிந்தவர் எனத் தெரிவிக்கப்படுகிறது 47

★ ரவி ஜெயவர்த்தனா கருத்து

## தந்திரிமலை வீழ்ச்சி

### அநுராதபுரத்துக்கு ஆபத்தாகலாம்

“தந்திரிமலை விஹாராதிபதி குடா கொங்கடவில ஞான நாயக்க தேரோவின் இடத்தை இனிமேல் யாராலும் நிரப்பமுடியாது. தந்திரிமலை வீழ்ந்தால் அநுராதபுரத்தின் ஏனைய பகுதிகளுக்கும் அது ஆபத்தாகவே அமைந்துவிடும்” இவ்வாறு ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் மகன் ரவி ஜெயவர்த்தனா பேட்டி ஒன்றில் தெரிவித்தார்.

குடியேற்ற இடங்களில் தேரோ தம்முடன் நெருங்கி ஒத்துழைத்ததாகவும் ரவி ஜெயவர்தனா அப்பேட்டியில் குறிப்பிட்டார்.

இவரின் கொலைக்கு காரணமானவர் வெளியிலிருந்து வரக்கூடிய எந்த சாத்தியமுமில்லை விஹாரைக்கு படையினரின் காவல் போடப்பட்டிருந்தது எனவும் அவர் அப்பேட்டியின்போது சுட்டிக்காட்டினார் 47

## புலிகளின் அதிரடிப்படை செய்தி தமிழகத்தில் கடும் பாதுகாப்பு

செங்கல்பட்டு சிறையிலுள்ள 26 பேரையும் சிறையிலிருந்து மீட்டுச் செல்ல 15 பேர் கொண்ட புலிகளின் அதிரடிப்படை ஒன்று தமிழகம் வந்துள்ளதாக மத்திய உள்துறை அமைச்சு எச்சரித்ததையடுத்து தமிழகத்தில் கடும் பாதுகாப்பு போடப்பட்டுள்ளதாக பி. பி. ஸி தெரிவித்தது.

எனினும் இப்படியொரு படை எதுவும் வந்ததற்கான ஆதாரம் ஏதுமில்லை என இந்திய கடலோர கண்காணிப்பு கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

# சாம்பல்தீவு கூட்டு முகாம்

## யூ.என்.எச்.சி.ஆர் உடன் இந்தியா ஒத்துழைக்குமாம்

அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயமைப்புடன் (யூ. என். எச். சி ஆர்) இணைந்து இலங்கை அகதிகளை திருப்பி அனுப்பும் விடயத்தில் இந்தியா செயற்படும் என இந்திய வெளியுற — 4 ஆம் பக்கம் பார்க்க

# புலிகளிடம் வீழ்ச்சி

## கசிப்புக்கு 50 ஆயிரம் ரூபா அபராதம்

## நல்லூர் உற்சவத்தில்

அகதிகளுக்கான உயர் ஸ்தானிகர அமைப்புடன் (யூ. என். எச். சி ஆர்) இணைந்து இலங்கை அகதிகளை திருப்பி அனுப்பும் விடயத்தில் இந்தியா செயற்படும் என இந்திய வெளியுற

— 4 ஆம் பக்கம் பார்க்க

# புலிகளிடம் வீழ்ச்சி

## இரு காவலரண்களும் அழிப்பு

**திருகோணமலை சாம்பல்தீவில் பொலிஸ், இராணுவ கூட்டு முகாம் ஒன்றும் இரு காவலரண்களும் நேற்று புலிகளால் தாக்கி கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன.**

நேற்று அதிகாலை 12 20 மணியளவில் திருமலை நகரிலிருந்து 5 மைல் தொலைவிலுள்ள பொலிஸ் இராணுவ கூட்டு முகாம் புலிகளின் திடீர் தாக்குதலுக்கு உள்ளானது.

அதே சமயம் சாம்பல் தீவு பாலத்தில் இருந்த இராணுவ காவலரணும் ஆத்திமோட்டையில் உள்ள காவலரணும் ஏககால தாக்குதலுக்குள்ளாயின.

அரை மணிநேர தாக்குதலின் பின் இராணுவ பொலிஸ் கூட்டு முகாம் புலிகளினால் கைப்பற்றப்பட்டது. சாம்பல் தீவு பாலம், ஆத்திமோட்டை காவலரண்களும் 10 நிமிட தாக்குதலின் பின் கைப்பற்றப்பட்டன.

இத்தாக்குதலில் 5 படையினர் பலியாகினர். ஏனையோர் தாக்குதலில் தப்பி ஓடிவிட்டனர்.

கைப்பற்றப்பட்ட கூட்டு முகாமும் இரு காவலரண்களும் புலிகளால் பின்னர் அழிக்கப்பட்டன.

இத்தாக்குதலில் புலிகள்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## சாம்பல்தீவில்

### கைப்பற்றிய ஆயுதங்கள்

சாம்பல்தீவு கூட்டு முகாம் மீதான தாக்குதலில் கைப்பற்றப்பட்ட இராணுவ தளபாடங்கள்

- சிங்கப்பூர் 203 பிஸ்டல் - 01
- ரி - 56 துப்பாக்கிகள் - 04
- எல்.எம்.ஜி. துப்பாக்கிகள் - 04
- இலகுரக மசின் - 12
- ஜே. ஆர். குண்டு - 18
- 40 எம். எம். ஷெல் - 05
- ஜ. எம். ரவைகள் -855
- நேட்டோ ரவைகள் -825
- 303 ரவைகள் -966
- 5.56 ரவைகள் -256
- 5.56 சன்னரவைகள் -119
- ஜ.எம். சன்னரவைகள் -145
- டம்மி ரவைகள் - 18
- ஏ.கே. மகஸீன்கள் - 28

— 4 ஆம் பக்கம் பார்க்க

## கசிப்புக்கு 50 ஆயிரம் ரூபா அபராதம்

இரத்தினபுரியில் கசிப்பு வைத்திருந்த இரு நபர்களுக்கு இரத்தினபுரி நீதவான் திரு [illegible] தலா 50 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார். 06

## நல்லூர் உற்சவத்தில் முதற்தடவை காவல்துறை

தமிழீழ காவல் துறையினர் நல்லூர் கந்தசுவாமி கோயிலின் உற்சவ காலங்களில் இங்கு வரும் பக்தர்களுக்கு முழு பாதுகாப்பையும் வழங்குவார்கள் என தமிழீழ காவல் துறை பொறுப்பாளர் திரு ப. நடே

04 ஆம் பக்கம் பார்க்க

★ தமது கை ஓங்குவதாக

## இராணுவம் அண்மையில் கூறியது அவசரப்பட்டு வெளியிட்ட தகவல்

"இராணுவம் தமது கட்டுப்பாட்டிலுள்ள பகுதி என அறிவிக்கும் பகுதியில் புலிகள் பெருமளவில் கூடி தாக்குதலை மேற்கொண்டிருக்கின்றனர். புலிகளின் இந்த நன்கு திட்டமிடப்பட்டு நடத்தும் தாக்குதல்களை தடுக்க முடியாத நிலையிலேயே படையினர் உள்ளனர் போல் தெரிகிறது."

இவ்வாறு நேற்று மட்டக்களப்பிலும், திருமலையிலும் நடந்த இருபெரும் தாக்குதல் குறித்து கருத்துத் தெரிவித்த பி.பி.ஸி கொழும்பு நிருபர் [illegible] தெரிவித்தார்:

புலிகளுக்கு எதிரான போரில் தமது கை ஓங்கி வருவதாக இராணுவம் அண்மையில் கூறியது அவசரப்பட்டு வெளியிட்ட தகவல் போலுள்ளது.

கடந்த சில வாரமாக புலிகளின் நடவடிக்கை கிழக்கில் அதிகரித்துள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

**நீர் விரையமாகின்**
**நீன் நாடு வீழ்ச்சியாகும்**

பல்கலைக்கழகம்

1 ஆம், 2 ஆம், 3 ஆம், 4 ஆம்

## கல்வியாண்டு பரீட்சைகள் - 1991

## கலை/வர்த்தகம்/முகாமைத்துவம்

| பரீட்சை | தொடங்கும்திகதி | முடிவடையும்திகதி |
|---|---|---|
| 1 ஆம் ஆண்டு கலை/வர்த்தகம்/ முகாமைத்துவம் | 17 08 92 | 26 08 92 |
| 2 ஆம் ஆண்டு பொது/சிறப்பு- பகுதி 1 கலை/வர்த்தகம்/ முகாமைத்துவம்/ முதுமெய்யியல்மாணி- தகுதிகாண் தேர்வு | 06 10,92 | 15.10,92 |
| 3 ஆம் ஆண்டு பொது/சிறப்பு- பகுதி 2 கலை/வர்த்தகம்/ முகாமைத்துவம்/ முதுமெய்யியல்மாணி- தகுதிகாண் தேர்வு | 21 09.92 | 02.10 92 |
| 4 ஆம் ஆண்டு சிறப்பு- பகுதி 3 கலை/வர்த்தகம்/ முகாமைத்துவம்/ முதுமெய்யியல் மாணி- தகுதிகாண் தேர்வு | 16 10,92 | 2[illegible].10 92 |

07072 பதிவாளர்

அறிவுள்ளவர்களாக, வலைப்பந்துக் குழுக்களிற்கு விளையாடியவர்களாக இருக்க வேண்டும். பயிற்சி முகாம் கோட்பாடுகள் செயல்முறை என இரு பிரிவுகளாக நடைபெறும். முடிவில் பரீட்சை நடாத்தப்பட்டு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும்.

விண்ணப்பங்களை அவ்வப் பகுதி வலையமைப்புட்ட பொறுப்பாளர்களிடம் அல்லது செயலாளர், யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு, மாவட்டச்செயலகம், கோண்டாவில் என்ற முகவரிக்கு 10 08 92 இற்கு முன்னதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

முற்றாக நிராகரித்துள்ளனர்.

கடந்த 11 ஆம் திகதி தந்திரிமலைக்கு அருகில் அமைந்திருந்த கட்டுப்பொத்த இராணுவமுகாம் விடுதலைப் புலிகளினால் தாக்கப்பட்டது குறித்து, விகாரையின் பிரதம குருவான கொலைப்பட்ட விமல ஞானநாயக்க தேரோ தெரிவித்திருந்த சில கருத்துக்களே இக் கொலைக்குக் காரணமாக இருந்திருக்கலாமெனவும் விசாரணையாளர்கள் கருதுகின்றனர்.

கட்டுப்பொத்த முகாமிற் கடமையிலிருந்த படையினர் மது மற்றும் ஒழுக்கமற்ற பழக்கங்களுக்கு அடிமையாகியிருந்ததாகவும் இதனால் முகாம் தகர்ப்பை அவர்களால் தடுக்க முடியாது

அதனைக் குறிவைத்து குறையின் ஜன்னலூடாக வீசப்பட்டதெனவும் இதனால் பிக்கு உடல் சிதறிப் பலியாக வேண்டி வந்ததெனவும் ஆலயத்திற்கு சேதமின்றும் நோக்கம் இச்சம்பவத்தில் ஈடுபட்டவர்களுக்கு இருக்கவில்லை எனவும் மேலும் பிக்குவை குறிவைத்து வீசப்பட்ட கிரனைற் படையினரின் பயன்பாட்டுக்கு என வழங்கப்பட்டதெனவும் சிங்களப் பத்திரிகையொன்று தெரிவித்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக அச்சமடம் அங்கு கடமையிலிருந்த இராணுவத்தினர் இரகசியப் பொலிஸாரின் விசாரணைக்கு உள்ளாகியுள்ளனர்.

தெல்லிப்பழை கூட்டுறவுக் கிராமிய வங்கி மூலம் ஓய்வூதியம் பெறுவோரின் ஓய்வூதியம் தற்போது மாவைப் பகுதியிலுள்ள கூட்டுறவுக் கிராமிய வங்கியில் வைத்து வழங்கப்பட்டு வருகிறது.

ஓய்வூதியம் பெறுவோர் தமது வவுச்சர்களையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்படுகின்றது. (22)

## புதிய புகையிரத சேவை

கொழும்பு-புத்தளம் மார்க்கத்தில் புதிய புகையிரத சேவையொன்று நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## ஒரிஸா விசேட முகாமில் 174 இலங்கைத் தமிழர்

கிழக்கிந்திய மாநிலமான ஒரிஸாவில் தற்பொழுது 174 இலங்கைத் தமிழர்கள் உள்ளதாக கொழும்புப் பத்திரிகை யொன்று தெரிவித்துள்ளது.

"இவர்கள் ஒரிஸாவில் கோராபுட் மாவட்டத்தில் மல்காங்கிரி என்னுமிடத்தில் அமைக்கப்பட்டுள்ள விசேட முகாமில் கடந்த இரண்டு வருடங்களுக்கும் மேலாகத் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் மீண்டும் இலங்கை திரும்ப தயக்கம் காட்டுகிறார்கள்" என இச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கனரக வாகனம் சிதறியது; 4 படையினரும் பலி!

இயக்கச்சிப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தாக்குதலில் இராணுவத்தினர் பயன்படுத்தும் கனரக வாகனமொன்று சிதறியதை பாதுகாப்பு அமைச்சு ஒத்துக்கொண்டுள்ளது.

இராணுவ கட்டுப்பாட்டினுள் உள்ள பகுதி என அரசால் கூறப்படும் இப் பகுதியில் நிகழ்ந்த இந்த கண்ணி வெடித் தாக்குதலில் நான்கு இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும், மேலும் நால்வர் காயமடைந்ததாகவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

காயமடைந்த இராணுவ வீரர்கள் பலாலி தளத்திலுள்ள இராணுவ வைத்திய சாலைக்கு ஹெலிக்கொப்டரில் எடுத்துச் செல்லப்பட்டதாகவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது.

# வை- 8 விமானத்தை விடுதலைப்புலிகள் வீழ்த்தவில்லை என்பதுவும் பீப்பாய்க்குண்டுகளே இல்லையென்பதுவும் சிறிலங்கா அரசு சர்வதேச அபிப்பிராயத்திலிருந்து தப்பித்துக் கொள்வதற்கே

சென்றவாரம் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாடு விமானப் படையின் குண்டு வீச்சு நடவடிக்கைகள் பற்றிய முக்கிய விடயங்களை விமர்சனத்துக்குள்ளாக்கியுள்ளது.

கூட்டுப்படை தலைமைப் பேச்சாளர் கேர்ணல் சரத் முனசிங்கவும், விமானப்படையின் விங் கொமாண்டர் ஜயந்தி வீரக்கொடியும் பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்க திணறியுள்ளனர்.

"விமானப்படை பீப்பாய்க் குண்டுகளைத் தயாரிக்கவும் இல்லை, போடவும் இல்லை. வை- 8 விமானம் விடுதலைப் புலிகளால் சுட்டுவீழ்த்தப்பட்டது என்பதை இறுதியாக நூற்றுக்கு நூறு வீதம் நிராகரிக்க முடியாது. ஆனால் அவர்கள் விமானத்தைத் தாக்கவில்லை நிலத்திலிருந்து விமானத்திற்கு சுடப்படவில்லை, ஒரு சூடு விமானத்தை வீழ்த்த முடியாது" என்பது இவர்களின் வாதம்.

வை-8 விமானம் ஜூலை மாதம் ஐந்தாம் திகதி தீவிர யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த இயக்கச்சிப் பகுதிக்கு மேலாக பறந்து கொண்டிருக்கும்போதே நடுவானிலேயே வெடித்துச் சிதறியது.

இந்த விமானம் தம்மால் சுட்டு வீழ்த்தப்பட்டதென விடுதலைப் புலிகள் உரிமை கோரியுள்ளனர்.

இதை மறுதலிக்கவே சிறிலங்கா ஆயுதப் படைகள் பகீரதப் பிரயத்தனம் செய்கின்றன.

ஐலண்ட் பத்திரிகை செய்திப்படி விமானத்தை விடுதலைப்புலிகள் சுடவில்லை என்பதை என்னால் கூற முடியும் (I Can Say they did not fire at the Aircraft என்று கூறியிருக்கிறார் இராணுவ பேச்சாளர் கேர்ணல் முனசிங்க.

இதை மட்டும் இவரால் எப்படி உறுதியாகக் கூற முடியும் என்ற கேள்வி நியாயமாக எழுகிறது

ஆனால் சண்டே டைம்ஸ் ஆங்கிலப் பத்திரிகை செய்தியின் படி-

ஏதோ நடந்துதான் விமானம் வெடித்திருக்கிறது என்பதை ஒத்துக் கொள்ளும் இவர்கள் அது என்னவென்று கூற முடியாதெனக் கூறும் அதேவேளை விடுதலைப்புலிகள் விமானத்தைச் சுடவில்லையென்று மட்டும் எவ்வாறு திடமாக, நிச்சயமாக அத்தனை தெளிவாகக் கூற முடியும் என்ற கேள்வியும் எழுகிறது.

சுட்டுவீழ்த்தப்பட்ட வை- 8 விமானம் பறந்த உயரத்துக்கு தாழ்வாக "எதிரி" பிரதேசத்தில் பறந்த விமானங்கள் பாதுகாப்பாகப் பறந்தால் வை- 8 விமானத்தை விடுதலைப்புலிகள் சுட்டு வீழ்த்தியிருக்க முடியாது என்பதும் இவர்களின் இன்னுமொரு வாதம்.

உயரமோ, தாழ்வோ பறப்பதல்ல முக்கியம்- குறி வைத்துச் சுடுவதே முக்கியம் என்பதையும் இவர்கள் மறைக்க முயல்கின்றனர்.

பீப்பாய் குண்டுகளை வை- 8 விமானம் போடவில்லையென்று விங் கமாண்டர் வீரக்கொடி சென்ற வாரம் கூறியுள்ளார். ஆனால் அவரிடம் வை- 8 விமானம் குண்டு வீசப்பட்டதா எனக் கேட்கப்பட்டபோது அது பற்றி எதையும் நான் குறிப்பிடவில்லை என்று கூறியுள்ளதை அவதானிக்க வேண்டும்.

"வை- 8 விமானத்தில் இருந்து பீப்பாய் குண்டு

எஸ். ஜி. எம்.

களைக் கீழே போட முற்பட்ட போது விமானம் அனர்த்தத்தில் சிக்கியது என்பது தவறு. இந்த விமான அனர்த்தத்துக்கு வெவ்வேறு காரணங்கள் கூறப்பட்டாலும் உண்மையான காரணம் இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை" என்றும் விங் கமாண்டர் வீரக்கொடி ஐலண்ட் பத்திரிகையில் வெளிவந்துள்ள பேட்டியில் கூறியுள்ளார்.

இத்தனைக்கும் இடையில் முன்னாள் விமானப்படைத் தளபதி எயர்வைஸ் மார்ஷல் ஹரி குணதிலக மிக முக்கியமான கருத்தை ஐலண்ட் பத்

வீழ்த்தியதுடன் வேறு பல உலங்கு வானூர்திகளை சேதப்படுத்தியுமுள்ளனர்" என்பது அவரது கருத்து.

இராணுவ மற்றும் விமானப்படை அதிகாரிகளின் மழுப்பலுக்கு தெளிவான பதிலளிப்பதாகவே இவரின் கூற்று உள்ளது அது மட்டுமல்ல 1990 செப்டெம்பரில் யாழ்ப்பாணம் கோட்டைக்கு அருகாமையில் கடலேரியில் வீழ்ந்து எரிந்த சியாமா செற்றி விமானத்தை விடுதலைப்புலிகள் தான் சுட்டு வீழ்த்தினர் என்பதை ஹரி குணதிலக உறுதி செய்தார். ஆனால் ஆயுதப் படைகள் இதை மறுத்தன என்பது குறிப்பிடத்தக்கது.

வை- 8 விமானம் ஒரு நேரக்குண்டு (time bomp போன்றதாக இருந்தது என்று ஹரி குணதிலக கூறியிருந்தார். பீப்பாய்க் குண்டுகள் பற்றியே இவர் இப்படிக் கூறினார் எனக் கொள்ள வேண்டும்.

ஆகவே இந்த விமானம் குண்டு வீச்சு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தது என்பது உறுதியாக்கப்படுகிறது இதை உறுதிப்படுத்தும் வகையில் இராணுவ விடய கட்டுரையாளர் தேசன் குணசேகர ஐலண்ட் பத்திரிகையில் எழுதிய கட்டுரை ஒன்றில்

"வை- 8 விமானம் ஒன்று குண்டு வீச்சு நடவடிக்கையின்போது வீழ்ந்து நொருங்கி எரிந்தது" என்று கூறியிருக்கிறார்.

இந்த வை-8 விமானம் இரத்மலானையில் இருந்து பல விக்கு இராணுவத்தினரையும் வெடிப்பொருட்களையும் ஏற்றிச் சென்றது என்பது ஆயுதப்படையினரின் தகவல்.

அப்படியாயின் இத்தனை விசாலமான வான் பரப்பு இருக்க இந்த விமானம் மிகவும் குறுகிய யுத்தப் பிரதேசத்துக்கு மேலாகப் பறந்தது ஏன் என்ற கேள்வி பதிலளிக்கப்படாமலே உள்ளது.

மேலும் இந்த விமானம்

தர்க்க ரீதியான முடிவுக்கு எவரும் வரவேண்டியே உள்ளது.

இதை ஏற்றுக் கொண்டால் விடுதலைப் புலிகளின் யுத்த பலத்தை ஏற்பதாக முடியும் என்பதாலேயே சிறிலங்கா ஆயுதப்படை முனைப்பாக மறுக்கிறது.

விடுதலைப் புலிகள் விமானத்தைச் சுட்டு வீழ்த்தவில்லையென்று கூறினால் இவ் விமானம் ஆபத்தான மரபுரீதியற்ற குண்டுகளை ஏற்றிச் சென்று அவை வெடித்தனவோ அல்லது விமானக் கோளாறு காரணமாகவோ விமானம் வெடித்துச் சிதறியது என சிறிலங்கா ஆயுதப் படையினர் கூறவேண்டும்.

இந்த இரண்டு விளக்கங்களும் இவர்களை விமான உற்பத்தியாளர்களுடன் மோதவைக்கும்.

இந்த விமானம் மரபு ரீதியற்ற குண்டுகளை கொண்டு செல்லவோ அல்லது குண்டு வீச்சு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படவோ வழங்கப்படவில்லை.

விமானக் கோளாறு காரணம் என்றால் அது நிரூபிக்கப்படவேண்டும். காரணம் காட்டப்படாதவிடத்து விமான உற்பத்தி நிறுவனத்தின் நற்பெயரை இந்த விமான வெடிப்பு பாதிக்கும்.

அப்படியொரு நிலையை அவை அனுமதிக்க மாட்டா. இந்தியன் எயர் லைன்ஸ் ராஜீவ்காந்தி பிரதமராக இருந்த காலத்தில் வாங்கிய எயர்பஸ் விமானங்கள் தரம் குறைந்தவை எனக் கூறியபோது, பி.சி.பி அரசு அவற்றின் பாவனையை தடைசெய்தது.

ஆனால் அந்த விமான நிறுவனம் இந்தக் கூற்றை ஏற்றுக்கொள்ள மறுத்ததைத் தொடர்ந்து எயர்பஸ் விமானங்களை இந்தியன் எயர் லைன்ஸ் மீண்டும் சேவையில் அமர்த்திய விவகாரத்தை ஒரு முன்னுதாரணமாக எடுக்கலாம்.

எனவே விமானத்தை விடு

---

நாயன்மார்கட்டு ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி
(பேய்ச்சி) அம்பாள் ஆலய
ஒன்பதாம் சப்பரத்திருவிழா (30.07.1992)
நற்பத மருள் சக்தி

இராகம் : கர்நாடக தேவ காந்தாரி தாளம்: ஆதி

பல்லவி

முத்துமணிச் சப்பரத்தில் நித்தம் ஒளிர
புத்தொளி வீசி வந்தாள் - சக்தியுமை
(முத்துமணி)

அநுபல்லவி

சுற்றி நின்றடியார் தோத்திரம் முழங்கிட
பற்றிய பவவினை நீக்கும் அபயம் காட்டி
(முத்துமணி)

சரணம்

சித்தம் புகுந்துதேவாய்த் தித்திக்கும் தேவிவாசல்
நித்தம் நடந்துசென்று திருவடி இறைஞ்சிட
தத்தம் துயரெல்லாம் கூறு செய்தழித்திடும்
முத்தும் விழிச்சுடராள் இராஜ இராஜேஸ்வரி
(முத்துமணி)

நாயன்மார்கட்டு இ. குகதாசன்

---

# பரிசுத்த பாப்பாண்டவர் வெளியேறினார்!

ரோம் மருத்துவமனையில் அறுவைச் சிகிச்சையின் பின் தேறிவந்த பரிசுத்த பாப்பாண்டவர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் (ஜோன் போல்) நேற்று முன் தினம் மருத்துவமனையை விட்டு வெளியேறினார்.

அறுவைச் சிகிச்சையின் பின்னர் சுமார் இரண்டு வாரங்கள் இவர் மருத்துவமனையில் தங்கியிருந்தார்.

பரிசுத்த பாப்பாண்டவர் வத்திக்கானிலிருந்து 25 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள அல்பா என்னும் மலையிலுள்ள இல்லத்தில் ஒருமாத காலத்திற்கு ஓய்வு எடுப்பார்.

மருத்துவமனையில் தன்னை விசேடமாகக் கவனித்த மூன்று டாக்டர்களுக்கு பாப்பாண்டவர் தனிப்பட்ட முறையில் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

# மாவீரர் தினத்தை முன்னிட்டு சுவரொட்டிப் போட்டி

மாவீரர் தினத்தை முன்னிட்டு விடுதலைப் புலிகளின் கடற்புலிப்பிரிவு சுவரொட்டிப் போட்டியொன்றினை நடத்தவுள்ளது

கடற்புலிகளின் கடந்தகால, தற்போதைய நிகழ்வுகளை மையமாகக் கொண்டு ஓவியங்கள் வரையப்படல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் ஓவியங்கள் மாவீரர் தின விழாவின் போது மக்கள் பார்வைக்கு வைக்கப்படவுள்ளதுடன் பரிசுகளும் வழங்கப்படவுள்ளன

பாடசாலை மாணவர்கள் மட்டத்திலான இப்போட்டிக்குரிய சுற்று நிருபங்கள் அதிபர்களுக்கு விரைவில் அனுப்பி வைக்கப்படவுள்ளன. (09)

# நீதிமன்றத் தீர்ப்பை நிராகரிக்க இந்து தீவிரவாதிகள் முடிவு

அயோத்தி ஆலய மசூதி விடயத்தில் நீதிமன்றம் தலையிடுவதனை நாம் விரும்பவில்லை என்று விஸ்வ ஹிந்து பரிஷத் கூறியுள்ளது

பகுதி என்பது நீதிமன்றத்

கூற இல்லை என்றும் இவ்வமைப்பு மேலும் தெரிவித்துள்ளது.

நான்கு மாதங்களுக்குள் இவ் விவகாரம் தொடர்பான தீர்ப்பு வெளியாகிவிடும் என்றும் அதனை யாவரும் ஏற்க

எப்படி உறுதியாகக் கூற முடியும் என்ற கேள்வி நியாயமாக எழுகிறது.

ஆனால் சண்டே டைம்ஸ் ஆங்கிலப் பத்திரிகை செய்தியின்படி-

"என்ன நடந்தது என்று சொல்லக்கூடிய நிலையில் நாம் இல்லை. விமானம் வெடிபொருள்களை ஏற்றிச் சென்றது. விமானம் வெடிப்பதற்கு ஏதோ நடந்திருக்க வேண்டும்."

("Something must have-happened to cause the explosion") என்று விமானப் படைத் தளபதி ரேறன்கு குணவர்த்தன கூறியிருக்கிறார்.

...வந்தலை பேட்டியில் கூறியுள்ளார்.

இத்தனைக்கும் இடையில் முன்னாள் விமானப்படைத் தளபதி எயர்வைஸ் மார்ஷல் ஹரி குணதிலக மிக முக்கியமான கருத்தை ஐலண்ட் பத்திரிகையில் வெளியிட்டுள்ளார்.

"ஒரு சிதறல் குண்டு (A Stray Shot) விமானத்தைத் தாக்கியிருக்கக் கூடும். கிளர்ச்சியாளர்களிடம் (விடுதலைப் புலிகள்) விமான எதிர்ப்புப் பீரங்கிகள் உள்ளன. கடந்த இரண்டு வருடங்களில் அவர்கள் ஒரு பியர் மாசெற்றி குண்டுவீச்சு விமானத்தையும் ஒரு உலங்கு வானூர்தியையும் சுட்டு...

விசாலமான வான்பரப்பு இருக்க இந்த விமானம் மிகவும் குறுகிய யுத்தப் பிரதேசத்துக்கு மேலாகப் பறந்தது ஏன் என்ற கேள்வி பதிலளிக்கப்படாமலே உள்ளது.

மேலும் இந்த விமானம் நடுவானிலே வெடித்து சிறிலங்கா இராணுவம் நிலைகொண்ட பகுதிக்குள்ளும் விடுதலைப்புலிகள் நிலைகொண்டிருந்த பகுதிக்குள்ளும் வீழ்ந்ததற்கு இருசாராருமே கண்டெடுத்த சிதைவுகளே ஆதாரம்.

ஆகவே யுத்தகள வான் பிரதேசத்தில் விடுதலைப் புலிகளால் சுடப்பட்டே இந்த விமானம் நடுவானில் வெடித்துச் சிதறியது என்ற...

...விங்கிளை இந்தியன் எயார்லைன்ஸ் மீண்டும் சேவையில் அமர்த்திய விவகாரத்தை ஒரு முன்னுதாரணமாக எடுக்கலாம்.

எனவே விமானத்தை விடுதலைப் புலிகள் சுட்டு வீழ்த்திய அதிர்ச்சியை விட மரபு ரீதியற்ற குண்டு வீச்சுகளில் ஈடுபட்ட நடவடிக்கைகள் சர்வதேச அரங்குக்கு வெளிவந்த விடயத்தில் இருந்து தப்பித்துக் கொள்வதற்கு சிறிலங்கா ஆயுதப்படையினர் வெற்றியளிக்க முடியாத பல முறைகளில் முயற்சிக்கின்றனர் என்பதைக் காணக்கூடியதாகவுள்ளது.

அயோத்தி ராமர் கோயில் விடயத்தில் நீதிமன்றம் தலையிடுவதனை நாம் விரும்பவில்லை என்று விஸ்வ ஹிந்து பரிசித் கூறியுள்ளது.

பகுதி என்பது நீதிமன்றத் தீர்ப்பு அப்பாற்பட்ட விடயம் என்றும் தாம் நீதிமன்ற நடவடிக்கைகளுக்குக் கட்டுப்படுவதாகப் பிரதமர் பி.வி. நரசிம்மராவிடம் தாம் ஒரு போதும் கூறவில்லை என்றும் இவ் இயக்கம் மேலும் தெரிவித்துள்ளது.

நான்கு மாதங்களுக்குள் இவ் விவகாரம் தொடர்பான தீர்ப்பு வெளியாகிவிடும் என்றும் அதனை யாவரும் ஏற்க வேண்டும் என்றும் பிரதமர் கூறியுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## மத்திய அரசுக்கு 3 மாதகால அவகாசம்

இராமர் கோயில் கட்டுவது தொடர்பான விடயத்தில் விஸ்வ ஹிந்து பரிசித் மத்திய அரசுக்கு மூன்றுமாத கால அவகாசம் கொடுத்துள்ளது.

இவ் இயக்கத்தின் தலைவர் அசோக் சிங்கால் மூன்றுமாத கால அவகாசம் பற்றி பிரஸ்தாபித்த அவர் நீதிமன்றத்திற்கு வெளியே இவ் விவகாரத்தை அணுக முடியும் என்றும் சொன்னார்.

## ஹிந்தி நடிகர் அம்ஜத்கான் மரணம்

பிரபல ஹிந்தி நடிகர்களில் ஒருவரான அம்ஜத்கான் மாரடைப்பால் பம்பாயில் மரணமடைந்தார். அவருக்கு வயது 49

இருநூறு படங்கள் வரையில் நடித்துள்ள இவரது மறைவையொட்டி படவுலக வட்டாரங்களில் பெரும் அதிர்ச்சி தெரிவிக்கப்பட்டது.

வட இந்திய படவுலகினர் திரண்டு சென்று கவலை தெரிவித்தனர்.

# வெளிநாட்டுத் தூதுவர்களிடம் மன்னார் அகதிகள் மன்றாட்டம்

கடந்த வியாழக்கிழமை பிரிட்டிஷ் தூதுவர் ஜோன் பீட், யு. என். டி. பி பிரதிநிதி றெ பேர்ட் இங்லண்ட் மற்றும் கனேடியத் தூதுவர் ஆகியோர் 'மன்னார் தீவுக்கு விஜயம் செய்திருந்தனர்.

இவர்கள் இலங்கை திரும்பிய அகதிகள் தங்க வைக்கப்பட்டுள்ள முகாமுக்குச் சென்றபோது அகதிகளின் உருக்கமான கோரிக்கைகள் அவர்களின் மனத்தை நெகிழச் செய்ததாக அங்கிருந்து கிடைத்த செய்தியொன்று கூறுகிறது.

எங்கள் கஷ்டங்களைப் போக்குங்கள். எங்களின் துயரங்களை நீக்குங்கள், பொருளாதாரப் பாதிப்பை ஈடு செய்ய உதவுங்கள், தொழில் வாய்ப்பைத் தாருங்கள்'

இவ்வாறு வெளிநாட்டுத் தூதுவர்களிடம் கெஞ்சி மன்றாடினார்கள் தமிழகத்திலிருந்து அழைத்து வரப்பட்டு மன்னாரிலுள்ள முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள்.

## பொது வேட்பாளரை நிறுத்த தேசிய முன்னணி கோரிக்கை

ஜனாதிபதி பதவிக்கு பொதுக் கருத்து வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்குத் தேசிய முன்னணி ஆதரவு தெரிவித்துள்ளது.

புதுடில்லியில் நடைபெற்ற தேசியமுன்னணித் தலைவர்களின் கூட்டத்தில் இக்கருத்து தெரிவிக்கப்பட்டது.

பிரதமர் இவ் விடயத்தில் சகல எதிர்க்கட்சிகளுடனும் கலந்தாலோசிக்க வேண்டுமென்றும் இக் கூட்டத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டது.

ஷெடியூல் சாதி அல்லது பழங்குடியைச் சேர்ந்த ஒருவரே இப்பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென தேசியமுன்னணியினர் விரும்புவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

நல்லூர் ... யாழ்ப்பாணம்



# சுதந்திரக்கட்சித் தேர்தல் மீண்டும் ஒத்திவைப்பு

ஆகஸ்ட் மாதம் இரண்டாம் திகதி நடைபெறவிருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய குழு தேர்தல்கள் செப்டெம்பர் மாதம் வரை மீண்டும் ஒத்தி போடப்பட்டுள்ளதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன

இந்த முடிவு கட்சி வட்டாரங்களில் கருத்து வேற்றுமைகளை ஏற்படுத்தக்கூடும் என்று கருதப்படுகிறது

தற்போதைய தலைமைக்கு விசுவாசமானவர்களை தேர்தல்கள் இல்லாமல் நியமனம் செய்ய எடுத்த முயற்சிகள் வெற்றியளிக்காதென உணர்ந்ததாலே தேர்தல் மூலமான தெரிவு ஒத்திப்போடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

திருமதி பண்டாரநாயக்கவின் ஆதரவு இருந்தபோதும் திருமதி சந்திரிகா குமாரணதுங்க கட்சியின் முக்கிய பதவியை பிடிக்க முடியுமா என்ற சந்தேகமும் எழுந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

1981இல் நடைபெற வேண்டிய கட்சித் தேர்தல்கள் கடந்த பன்னிரண்டு வருடங்களாக ஒத்திவைக்கப்பட்டது ஜனநாயக முறையில் கட்சி அலுவலர்களை தேர்ந்தெடுக்கும் உரிமையை கட்சி உறுப்பினர்களுக்கு மறுப்பதாக அமைந்துள்ளது எனக்குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

1991இல் கட்சித் தேர்தல்களை நடாத்த முயற்சி எடுக்கப்பட்டபோதும் அது காலத்துக்குக்காலம் ஒத்திப்போடப்பட்டு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அண்மையில் நித்தம்புவவில் அனுர பண்டாரநாயக்க கோஷ்டிக்கும் சந்திரிகா குமாரணதுங்க கோஷ்டிக்கும் இடையே இடம் பெற்ற மோதல்கள் கட்சிக்குள்ளே இருக்கும் அதிகாரப் போட்டியை வெளிக் கொண்டு வந்துள்ளதெனவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

# கிளிநொச்சியில் பரீட்சைக்கு ஏற்பாடு

கிளிநொச்சி மாவட்டத்திலும் எதிர்வரும் க.பொ.த உயர்தர பரீட்சையை எதுவித தடையுமின்றி நடத்தச் சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

இப்பரீட்சைக்குரிய அனுமதி அட்டைகள், வினாத்தாள்கள் மற்றும் ஆவணங்கள் ஏற்கனவே அங்கு வந்து சேர்ந்துள்ளதாக கச்சேரி உத்தியோக வட்டாரங்கள் தெரிவித்தன.

வினாத்தாள்கள் தரை மார்க்கமாக கொழும்பிலிருந்து கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 47

# பஸ்ஸில் ஏற தாமதித்ததால் ஈரான் வீரர் தோல்வி

பார்சிலோனா ஒலிம்பிக் போட்டியின் நான்காம் நாளாக நேற்று இரு புதுமையான சம்பவங்கள் இடம் பெற்றன

இங்கிலாந்து சைக்கிள் வீரர் கிறிஸ் போட்மேயர் கொண்டு வந்த சுப்பர் சைக்கிள் புதுமையான வடிவமைப்பாக இருந்தது இதை பயன்படுத்தி பூர்வாங்க முதல் சுற்றிலேயே அவர் ஒலிம்பிக் சாதனையை முறியடித்தார்.

கலப்புலோகம் ஒன்றினால் செய்யப்பட்ட இந்த சைக்கிளின் சிறப்பிக உயரமானது பிரிட்டனின் பிரபல கார் உற்பத்திநிறுவனமான லோட்டஸ் இதை தயாரித்தது இரகசியமாக பேணிவந்தது

திடீரென ஒலிம்பிக்கில் இது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதால் பிரிட்டன் வீரரின் வெற்றிவாய்ப்பு அதிகமாக உள்ளது

குத்துச் சண்டையில் ஈரானிய வீரர் அலி கானி னர பாகிஸ்தானிய வீரருடன் போட்டியில் குறிப்பிட்ட நேரத்தினுள் வராததினால் பாகிஸ்தான் வீரர் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

பஸ்ஸை தவறவிட்ட ஈரானிய வீரர் சில நிமிடம் தாமதித்து அரங்கத்தினுள் ஓடி வந்தார் போட்டியிட அனுமதிக்குமாறு கோரினார் மத்தியஸ்தர்கள் அனுமதி மறுத்தனர் இதனைக் கராத்தேப் போட்டியின்றி பாகிஸ்தான் வீரர் வெற்றிபெற்றார்

ஒரு போட்டியாளர் வந்தும் எதிர் போட்டியாளர் வர 3 நிமிடம் தாமதித்தால் முதலில் வந்தவரே வெற்றி பெற்றவராக கருதப்படுவார் என்பது விதியாகும்

ஆண்களுக்கான ஹொக்கி போட்டியில் கடந்த ஒலிம்பிக் சாம்பியன் பிரிட்டனை ஜேர்மனி முதற்சுற்றுப்போட்டியில் 3:0 என்ற கோல் கணக்கில் முறியடித்தது

பெண்கள் ஜிம்னாஸ்டிக் போட்டியில் கி ஐ. ஸெ எனும் சோவியத் குடியரசுகளைச் சேர்ந்தவர் தங்கப் பதக்கம் பெற்றார்.

# சமூக விரோத குற்றம் புரிந்த 12 பேர் நேற்று விடுவிப்பு

தேசத்துரோகத் தற்கும் சமூக விரோத குற்றச் செயல்கள் புரிந்தமைக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளினால் கைது செய்யப்பட்டுத் தடுத்துவைக்கப்பட்டிருந்த பன்னிரெண்டு பேர் நேற்று முற்பகல் கோண்டாவில் தலைமைச் செயலகத்தில் வைத்து அவர்களது பெற்றோர்களிடமும், உறவினர்களிடமும் ஒப்படைக்கப்பட்டனர்

இவர்களில் எட்டுப் பேர் வலிகாமத்தைச் சேர்ந்தவர்கள் மூவர் வன்னியையும், ஒருவர் வடமராட்சியையும் சேர்ந்தனர் இவர்களை விடுவித்து பெற்றோரிடமும், உறவினரிடமும் ஒப்படைக்கும் போது விடுதலைப் புலிகள் யாழ் மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு இளம்பரிதி இவர்கள் புரிந்த தேச, சமூகவிரோதச் செயல்களை எடுத்துரைத்தார்

அவர் பேசும்போது 'தேச சமூக விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்ட பலரை நாம் கைது செய்து அவர்களது குற்றங்களைச் சுட்டிக்காட்டி உணரச் செய்தபின் அவர்கள் திருந்தக் கூடிய வகையில் நல்ல நெறிகளைப் புகட்டியபின் கட்டம் கட்டமாக விடுதலைசெய்கிறோம்' என்றார்

இவர்கள் நன் நடத்தை முகாமில் இருந்த போது இவர்களது குடும்பங்களுக்கு உணவு, உடை, பிள்ளைகளின் கல்வி வசதி ஆகியன விடுதலைப்புலிகளினால் வழங்கப்பட்டதாக அவர் மேலும்கூறினார்

# இந்திய உப ஜனாதிபதி தேர்தல்

# நாராயணன் காங்கிரஸ்வேட்பாளர் தேசியமுன்னணி ஆதரிக்கும்

கேரளாவைச் சேர்ந்த முன்னாள் அமைச்சரும் இராஜதந்திரியுமான கே.ஆர். நாராயணனை இந்திரா காங்கிரஸ் கட்சி இந்திய உப ஜனாதிபதி தேர்தலுக்கான தமது கட்சி வேட்பாளராக நிறுத்துவதை நேற்றிரவு அறிவித்தது

பிரதமர் நரசிம்மராவ் எதிர்கட்சிகளுடன் கலந்தாலோசித்தபின்பே இந்த அறிவித்தல் வெளியிடப்பட்டது இத்தேர்தலுக்கானவேட்புமனுத் தாக்கல் செய்யும் கடைசி நாள் நாளையாகும்

இதற்கு முன்பு பிரதமரை சந்தித்த தேசிய முன்னணியின் பிரதிநிதிகள் குழு உப-ஜனாதிபதி பதவிக்கு பிற்படுத்தப்பட்ட வகுப்பைச்சேர்ந்த ஒருவரை நியமிக்கவேண்டுமெனக் கோரிக்கைவிடுத்தனர்

இதற்கமைய பிரதமர் நரசிம்மராவ் திரு.கே, ஆர்.நாராயணனின் பெயரை முன்வைத்தபோது அதை தேசிய முன்னணியினர் ஏற்றுக்கொண்டனர். இத்தகவலை பிரதமரைச் சந்தித்தபின்பு செய்தியாளர்களைச் சந்தித்த தேசிய முன்னணித் தலைவர் என்.ரீ. ராமராவ் தெரிவித்தார்

தேசிய முன்னணியின் தூதுக்குழுவில் என்.ரீ ராமராவ் எஸ். ஆர் பொம்மை, வி.பி சிங், முரசொலிமாறன் ஆகியோருடன் வேறு சிலரும் இடம் பெற்றனர்

தேசிய முன்னணித் தெரிவுடன் தம் ஒத்துப்போகவுள்ளதாக மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சிச் செயலாளர் ஹரிகிஷன் சிங் சுர்ஜித் தெரிவித்ததாகவும் என்.ரீ. ராமராவ் தெரிவித்தார்

இதற்கிடையில் அ.இ.அ.தி.மு.க. பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்திரா காங்கிரஸ் வேட்பாளரை ஆதரிப்பார்கள் என தமிழக முதல்வர் ஜெயலலிதா அறிவித்தார் பிரதமர் நரசிம்மராவ் அவருடன் நேற்று தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசியதைத் தொடர்ந்தே ஜெயலலிதா இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்

இந்த நிலையில் திரு. கே, ஆர், நாராயணன் இந்திய உப-ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுவது ஏறக்குறைய உறுதியாகி விட்டது

தேர்தல் ஒன்று நடைபெற்றால் லோக்சபை, ராஜ்ய சபை உறுப்பினர்கள் மட்டுமே வாக்களிக்க உரித்துடையவர் என்பது குறிப்பிடத்தக்கது

# போட்டிப் பரீட்சை விண்ணப்பம் தபாற் கந்தோர்களில் பற்றுச்சீட்டு பெற ஏற்பாடு

தற்போது கோரப்பட்டுள்ள எழுதுவினைஞர் போட்டிப் பரீட்சைக்குரிய நூறு ரூபா பற்றுச்சீட்டை விண்ணப்பதாரிகள் சகல தபாற்கந்தோர்களிலும் பெறுவதற்கு யாழ் மாவட்ட தபால் அத்தியட்சகர் கே, இராஜேந்திரம் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இது குறித்து நேற்று முன்தினம் முரசொலி சுட்டிக்காட்டியது தெரிந்ததே.

யாழ் பிரதம தபாற்கந்தோரில் விண்ணப்பதாரிகள் நேற்று நூறு ரூபா பற்றுச்சீட்டை பெற்று விண்ணப்பங்களை அனுப்பியதையும் காணமுடிந்தது.

வர்த்தமானி அறிவித்தல் கிடைக்காத நிலையிலும் யாழ் மாவட்டத்தில் இருந்து விண்ணப்பிப்போரின் நன்மை கருதி தபால் அத்தியட்சகர் இத்தகைய நடவடிக்கையை எடுத்துள்ளார். 06

## யூ.என்.எச்.சி.ஆர் -

வுக் குறை அதிகாரி பொருவர் நேற்று தெரிவித்தார்

இலங்கை அகதிகள் தாமாக முன்வந்து திரும்புவதையே இந்தியா விரும்புகிறது. இதற்கு யூ என் எச். சி ஆர் ஒத்துழைப்பு பெறப்படும் எனவும் அவர் தெரிவித்தார்

## சாம்பல்தீவு...

தரப்பில் எவ்வித சேதமும் ஏற்படவில்லை, நீண்ட நாட்களின் பின் திருமலையில்

# பார்ஸிலோனா ஒலிம்பிக் - 92 பதக்க விவரம்

| | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|
| சி ஐ எஸ் முன்னாள் சோவியத் குடியரசுகள் | 08 | 05 | 02 |
| சீனா | 05 | 07 | 02 |
| ஹங்கேரி | 05 | 02 | 01 |
| அமெரிக்கா | 04 | 04 | 02 |
| தென்கொரியா | 04 | — | 01 |
| ஜேர்மனி | 02 | 01 | 04 |
| ஸ்பெயின் | 02 | — | — |
| ஜப்பான் | 01 | 02 | 01 |
| பல்கேரியா | 01 | 02 | 02 |
| அவுஸ்திரேலியா | 01 | 01 | — |
| கியூபா | 01 | 01 | — |
| துருக்கி | 01 | — | — |
| பிரான்ஸ் | — | 02 | 04 |
| சுவீடன் | — | 02 | 01 |
| நோர்வே | — | 01 | — |
| போலந்து | — | 01 | — |
| பிரேசில் | — | 01 | — |
| ருமேனியா | — | 01 | 02 |
| பேரு | — | 01 | — |
| நெதர்லாந்து | — | — | 03 |
| மொங்கோலியா | — | — | 01 |
| சூரினாம் | — | — | 01 |

# மேமாத மாணவர் முத்திரை குமண கப்பலில் வரும்

யாழ்.மாவட்ட பாடசாலை மாணவர்களுக்குரிய மே மாதத்துக்குரிய மதிய உணவு முத்திரைகள் 6ஆம் திகதி குமண கப்பலில் எடுத்துவரப்

படியாக பிரதேச செயலகங்கள் ஊடாக பாடசாலை அதிபர்களுக்கு மாணவர்களின் எண்ணிக்கை விவரங்களின்படி

யாளர்களைச் சந்தித்த தேசிய முன்னணித் தலைவர் என் ரீ. ராமராவ் தெரிவித்தார்

தேசிய முன்னணியின் தூதுக் ... றாக லோக்சபை, ராஜ்ய சபை உறுப்பினர்கள் மட்டுமே வாக்களிக்க உரித்துடையவர் என்பது குறிப்பிடத்தக்கது


## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

# நாவலர் மண்டப தளபாட விநியோகம்

நாவலர் மண்டபத்திற்குத் தேவையான கைக்கதிரைகள், மேசை மற்றும் கரும்பலகை ஆகியவற்றை விநியோகம் செய்வதற்குரிய கேள்விப் படிவங்களை வழங்குதல், பூர்த்தி செய்யப்பட்ட படிவங்களை ஏற்றுக்கொள்ளல் ஆகியனவற்றுக்கான திகதிகள் கீழுள்ளவாறு நீடிக்கப்பட்டுள்ளன.

1. கேள்விப் படிவங்களை வழங்கல் - 31 07 92 வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிவரை,
2. பூரணப்படுத்தப்பட்ட கேள்விப் படிவங்களை ஏற்றுக்கொள்ளுதல் - 30 08 92 திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிவரை.

அதேதினம் பிற்பகல் 2 30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும்.

மாநகர ஆணையாளர்

மாநகர அலுவலகம், யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம், 29 07 1992. 07074



இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் டச்சு வீதி கலவியங்காடு யாழ்ப்பாணம் டெசுமி கட்டிடத்தில் உள்ள அச்சகத்தில் 30 07-92 இல அச்சிட்டு வெளியிடப்பெற்றது


வும் அவர் தெரிவித்தார்.

**சாம்பல்தீவு ...**

தரப்பில் எவ்வித சேதமும் ஏற்படவில்லை, நீண்ட நாள்களின் பின் திருமலையில் படையினரின் முகாம் ஒன்று அழிக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

**சாம்பல் தீவு ...**

- எஸ் - 84 மகஸீன் - 04
- பராவெளிச்சக்குண்டு - 02
- தண்ணீர் தாங்கி - 15
- கோசலர்கள் - 20
- இராணுவ தொப்பி - 07
- ஹெலமட் - 29
- மழைக்கவசம் - 05
- இராணுவ பை - 07
- எம-84துப்பாக்கி ரொக்கட் - 02
- இராணுவசப்பாத்துகள் -18

மற்றும் பல இராணுவ தளபாடங்கள்

**கிளாலி ...**

உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில தினங்களாக வீசிய கடும் காற்றினால் இப்படகு சேவை நிறுத்தப்பட்டதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது

தற்போது காற்று வீசுவது மிகவும் குறைந்திருப்பதால் படகு சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது 47

யாழ் மாவட்டத்தில் இருந்து விண்ண பிப்போரின் நலனை முன்னிட்டு தபால் அதிபர் சகல ஏற்பாடுகளையும் ... நடவடிக்கையை எடுத்துள்ளார். 06

**ரோநது ...**

இவர்கள் மீதும் புலிகளின் மற்றுமோர் அணி தாக்குதலை தொடுத்தது புலிகள் நடத்திய ஆர். பி ஜி தாக்குதலில் கவசவண்டி ஒன்று சேதமானது இதனைவிட மேலும் 2 பவல் கவச வாகனங்களும் பின் வாங்கிச்சென்றுவிட்டன.

**அகதிகளை ...**

பிக்கப்பட்டுள்ளதை அதனை அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

விமானம் மூலம் அழைத்து வர திட்டமிடப்பட்டுள்ள இந்த 10 ஆயிரம் இலங்கை தமிழர்களும் தமது சுயவிருப்பின் பேரிலேயே தாயகம் திரும்புவதாக தமிழக அரசதரப்பில் மீண்டும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மட்டக்களப்பில ...**

- ஜே ஆர் குண்டுகள் - 03
- ஐ எம் ரவைகள் - 4194
- 60 எம், எம் ஷெல் - 01
- 4 எம். எம் ஷெல் - 05
- கோசர் - 22
- இராணுவப்பை - 04
- 13 சோடி சப்பாத்துகள்

யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்களுக்குரிய மே மாதத்துக்குரிய மதிய உணவு முத்திரைகள் 6ஆம் திகதி குமண கப்பலில் எடுத்துவரப் படும் என யாழ் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன

முத்திரைகள் வந்ததும் உடனடியாக பிரதேச செயலகங்கள் ஊடாக பாடசாலை அதிபர்களுக்கு மாணவர்களின் எண்ணிக்கை விபரங்களின்படி விநியோகிக்கப்படும் எனவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன 47

## ● ராஜீவ் கொலையில்
# காங்கிரஸ் தொடர்பு குறித்து ஆதிரை மனு தாக்கல்

ராஜீவ் காந்தி கொலையில் புதுடில்லியிலுள்ள அனைத்திந்திய காங்கிரஸ் அலுவலகத்தில் பணிபுரியும் கல்யாணராமனுக்கும் தொடர்பு இருப்பதாக இக்குற்றச்சாட்டின் பேரில் சிறைவைக்கப்பட்டுள்ள இலங்கைபெண்ணான ஆதிரை சென்னை நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார்,

ராஜீவ் ஸ்ரீபெரம்புதூரில் மே 21 இல் வரும் செய்தியை கல்யாணராமனே முதன் முதலாக தற்கொலை செய்துகொண்ட சிவராசனுக்கு அறிவித்தார் எனவும் ஆதிரை தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்

எனினும் கல்யாணராமன் இப்போது புதுடில்லி காங்கிரஸ் அலுவலகத்தில் பணியாற்றவில்லை என விசேட புலனாய்வுக்குழு இந்த மனுவுக்கு எதிர்ப்பு ஆட்சேபனை தெரிவித்துள்ளது.

**நல்லூர் ...**

சன் முரசொலிக்கு தெரிவித்தார்.

உற்சவத்தை முன்னிட்டு நல்லூர் பகுதியில் தற்காலிகமாக காவல் பணிமனை ஒன்றும் திறந்து வைக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

அத்துடன் போக்குவரத்து கண்காணிப்புவேலைகளையும் தமிழீழ காவல்துறையினரே மேற்கொள்வர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த பல வருடங்களின் பின் நல்லூர் கந்தசுவாமி கோயில் உற்சவத்தில் இம்முறை தமிழீழ காவல் துறையினர் கடமையாற்றவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது,47